DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.304/2019**

**P.W.1**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | சுருளிமலை |
| Father Name | : | ராமையா தேவர் |
| VILLAGE | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.08.2023

( 2 வது எதிரி ஆஜர். 1 வது எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>**

நான் தற்போது மதுரை தபால் தந்தி நகரில் குடியிருந்து, சிவகங்கை, துணை வேளாண்மை இயக்குநராக பணிபுரிந்து வருகிறேன். சம்பவ சமயத்தில் திருமங்கலம் வேளாண்மை உதவி இயக்குநராக பணிபுரிந்த போது, கடந்த 2016 ம் ஆண்டு திருமங்கலம் சட்டமன்ற தொகுதி தேர்தல் சமயத்தில் பறக்கும் படை 3 பிரிவுகளில் சி பிரிவுக்கு என்னை பொறுப்பாளராக நியமிக்கப்பட்டு, 22.03.2016 ம் தேதியன்று என்னுடன் திருமங்கலம் சார்பு ஆய்வாளர் பெரியசாமி, பேரையூர் தலைமை காவலர் கோபாலகிருஷ்ணன், திருமங்கலம் அனைத்து மகளிர் காவல் நிலைய காவலர் மகேஸ்வரி ஆகியோர் வாகன சோதனை பணியில் இருந்தோம். 22.03.2016 ம் தேதி செக்கானூரணி – சோழவந்தான் ரோட்டில் தேங்கல்பட்டியில் பிச்சை பெட்ரோல் பல்க் அருகில் வழக்கமான வாகன சோதனையில்

ஈடுபட்டுக்கொண்டிருந்த போது, TN 57 AL 3586 Bolero Max வண்டியை நிறுத்தி சோதனை செய்தோம். அதில் எங்கள் எதிர்பார்ப்புக்கு மாறாக வெடிமருந்துகள், ஜெலடின் குச்சிகள், டெட்டனேட்டர்கள் ஆகியவை இருந்தன. தேர்தல் பணி நேரத்தில் தேர்தலுக்கு குந்தகம் விளைவிக்கும் செயலாக இருக்கும் என்று கருதி செக்கானூரணி காவல் நிலையத்திற்கு இது சம்பந்தமாக தகவல் சொன்னோம். புகார் எழுதித்தரும்படி காவல் சார்பு ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, புகார் மனு கொடுத்தேன். மேற்படி வண்டியில் வீரசக்தி என்ற டிரைவரும், வீரமணி என்ற ஆஜர் எதிரியும் இருந்தார்கள். 1200 ஜெலடின் குச்சிகளும், 700 டெட்டனேட்டர்களும் இருந்தன. வெடிபொருளை கையாள்வதற்கு தகுந்த ஆட்களை உடன் அழைத்துச்செல்லவில்லை. என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான், அது அசாஆ 1 ஆகும். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் கு.வி –

செக்கானூரணி காவல் நிலையத்தில் கொடுத்த புகாரில் எந்தவித அடித்தல் திருத்தல், இடைச்செருகல்கள் இல்லை என்றால் சரிதான். புகாரில் எழுதியுள்ள மையும் நான் கையொப்பம் செய்துள்ள மையும் வெவ்வேறானவை என்றால் சரிதான். நான் புகார் கொடுத்த பிறகு என் முன்னிலையில் புகாரில் செக்கானூரணி காவல் துறையினர் எதுவும் எழுதவில்லை. புகாரில் இன்று 22.03.2016ம் தேதி சுமார் 12.30 மணிக்கு நாங்கள் என்ற வாசகம் இடைச்செருகலாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாகன சோதனை செய்யும் போது, வாகனத்தின் ஆவணங்கள் எதுவும் கேட்டுப்பெறவில்லை என்றால் சரிதான். வெடிபொருட்களை கொண்டு செல்வதற்கான போக்குவரத்து உரிமம் உள்ளதா என்றும் எந்த இடத்திற்கு வெடிபொருட்கள் கொண்டு செல்வதற்கான உரிமத்தை கேட்டோம், அவர்கள் காட்டவில்லை. நாங்கள் ஆவணத்தை கேட்டது சம்பந்தமாகவும், அவர்கள் காட்டவில்லை என்பது சம்பந்தமாகவும் நான் போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால்

சொல்லாமல் இருந்திருக்கலாம். நான் கொடுத்த புகாரிலும் ஆவணத்தை கேட்டு, கொடுக்கவில்லை என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வாகன சோதனையின் போது டெட்டனேட்டர்கள், ஜெலடின் குச்சிகள் ஆகியவை பேக்கிங் செய்யட்டிருந்தன. எத்தனை அட்டை பெட்டிகள் இருந்தது என்று எனக்கு தெரியாது. 1வது எதிரி மேற்படி வேனை ஓட்டி வந்தார் என்பதற்கான ஆவணம் எதுவும் காவல் துறையினரிடம் ஒப்படைக்கவில்லை. நாங்கள் தகவல் சொன்ன பின்னர், வாகன சோதனை செய்த இடத்திற்கு டி.எஸ்.பி உள்பட காவல் துறை உயர் அதிகாரிகள் சம்பவயிடத்திற்கு வந்துவிட்டார்களா என்றால் ஆய்வாளர் மட்டும் வந்தார். டி.எஸ்.பி நான் புகார் கொடுக்கும் போது செக்கானுரணி காவல் நிலையத்திற்கு வந்துவிட்டார், ஆய்வாளரும் உடனிருந்தார். இந்த வழக்கில் சோதனை செய்து வழக்கு சொத்துக்களை கைப்பற்றியது நான் தான் என்றால் கைப்பற்றி காவல் நிலையத்தில் ஒப்படைத்துவிட்டேன். செக்கானுரணி காவல் நிலையம் பேருந்து நிலையத்திற்கு அருகே மக்கள் நெரிசல் அதிகம் உள்ள பகுதியில் அமைந்துள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் இரண்டு வெடிபொருள் ஏற்றி வந்த வாகனம் என்னால் சோதனை செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பெட்ரோல் பல்க் அருகில் நாங்கள் வாகன சோதனை செய்த போது அருகில் டீக்கடை, வீடுகள் இருந்தன என்றால் சரிதான். ஒரு வெடிபொருளை யார் கைப்பற்ற வேண்டும் என்றும் யார் கையாள வேண்டும் என்றும் எனக்கு தெரியாது. வெடிபொருள் சட்டம் மற்றும் விதிகள் பற்றி எனக்கு தெரியாது. வெடிபொருளை கையாள்வதற்கு ஒரு நபர் தேவை என்ற விவரம் எனக்கு தெரியும். நான் சோதனையிட்ட வாகனத்தில் வெடிபொருளை கையாள்வதற்கு ஒரு நபர் இருந்தார் என்றால் சரியல்ல. நான் போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க வெடிபொருள் கையாள்வதற்கு ஆள் இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கைப்பற்றப்பட்ட அட்டை பெட்டியில் தயாரிப்பாளர் பெயர், தேதி, என்ன வகையான வெடிபொருள் ஆகிய விவரம்

குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் சரிதான். காவல் துறையிடம் ஒப்படைக்கும் போது அட்டை பெட்டியுடன் தான் ஒப்படைத்தேன் என்றால் சரிதான். சோதனை இட்ட இடத்தில் சுமார் 45 நிமிடங்கள் இருந்தோம். சோதனையிட்ட பின்னர் தான் செக்கானுரணி காவல் ஆய்வாளருக்கு தகவல் கொடுத்தேன் என்றால் சரிதான். வெடிபொருட்களை அதே வாகனத்தில் ஏற்றி தான் காவல் நிலையத்திற்கு கொண்டு சென்றோம். நான் காவல் நிலையத்தில் மீண்டும் சரிபார்த்து புகார் கொடுத்ததாக காவல் துறை விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். போலிசார் விசாரணையின் போது நடந்த சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்க எங்கள் மேலதிகாரிக்கு தகவல் கொடுத்து, எழுத்துமூலமான புகார் கொடுத்தேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேலும் போலிஸ் விசாரணையின் போது செக்கானுரணி காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்த விவரம் தெரிந்து கொண்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த விவரத்தை செக்கானுரணி காவல் துறையினர் சொல்லித்தெரியும். நான் காவல் நிலையத்தில் புகாரை காவல் ஆய்வாளரிடம் கொடுத்தேன். வாகனத்தை சோதனையிட்ட போது மக்கள் யாராவது வந்து பார்த்தாகளா என்றால் வழக்கமான சோதனை என்று பார்த்துவிட்டு சென்றார்கள். நான் கொடுத்த புகாரில் தேங்கல்பட்டி என்ற வாசகம் இல்லை என்று சொன்னால் சரிதான். 2ம் எதிரியை பற்றி சொல்லும் போது திண்டுக்கல் மாவட்டம், பெரியகடை வீதியை சேர்ந்தவர் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். திண்டுக்கல் மாவட்டத்தில் பெரிய பெரிய நகரங்கள் ஆங்காங்கே இருக்கின்றன என்றால் சரிதான். ஒரு ஊரில் ஒரே ஒரு பெரிய கடை வீதி மட்டும் தான் இருக்கும். வெடிபொருட்களை காவல் நிலையத்தில் ஒப்படைத்த பின்னர் புகாரை வாங்கினார்களா அல்லது புகாரை கொடுத்தவுடன் ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைத்தவுடன் புகார் கேட்டார்கள், எழுதிக்கொடுத்தேன். அப்போது 1, 2 எதிரிகளும் எங்களுடன் காவல் நிலையத்தில் இருந்தார்கள். இந்த வழக்கில் நான் எதிரிகள் மீது என்ன

குற்றச்சாட்டை செய்திருக்கிறேனோ அதே குற்றத்தை தான் நானும் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சோதனையிட்ட இடத்தை செக்கானூரணி காவல் துறையினருக்கு நான் அடையாளம் காட்டினேன். பொதுவாக தேர்தல் பணியில் வாகனங்களை சோதனையிடும் போது வீடியோ cum போட்டோகிராபர் இருப்பார் என்றால் சரிதான். நாங்கள் சோதனை இட்ட அன்றைய தினமும் வீடியோ cum போட்டோகிராபர் இருந்தார். அவர் யார், என்ன விவரம் என்று காவல் துறையினரிடம் தெரிவித்தேனா என்றால் அந்த கேள்வி எழவில்லை. நாங்கள் சோதனை செய்த போது வீடியோகிராபர் வீடியோ எடுத்தார். வெடிபொருட்கள் கொண்டு வந்த வாகனத்தை 12.30 மணிக்கு பார்த்தோம், 01.15 மணிக்கு கைப்பற்றினோம். சம்பவத்தை பற்றி எங்கள் அணியில் உள்ளவர்கள் புகார் எழுதினார்கள், நான் கையொப்பம் போட்டு கொடுத்தேன். எங்கள் அணியில் இருந்த காவல் துறையினர் யாரும் எழுதவில்லை. புகாரை யார் எழுதினார்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியவில்லை. கைப்பற்றியதாக சொல்லும் வாகனம் முழுக்க முழுக்க வெடிபொருட்கள் கொண்டு செல்லும் வாகனம் என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. முதல் விசாரணையில் தேர்தல் நேரத்தில், தேர்தலுக்கு குந்தகம் விளைவிக்கும் செயலாக இருக்கும் என்று புகாரிலும் போலிஸ் விசாரணையிலும் குறிப்பிடவில்லை என்றும் முதல் முறையாக தற்போது தான் குறிப்பிடுகிறேன் என்றால் சரிதான். வாகனத்தை வீரசக்தி என்ற ஓட்டுனரும், வீரமணி என்ற 2ம் எதிரியும் வாகனத்தில் இருந்ததாக புகாரிலும் போலிஸ் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். அன்றைய தினம் இரண்டு இ வாகனங்கள் TN 57 AL 3586, TN 57 AA 8235 நான் சோதனையிட்டு ஆவணங்களை கைப்பற்றினோம் என்றால் சரியல்ல. முதல் வாகனம் எங்கள் பார்வையிலிருந்து தப்பியிருக்கலாம். நான் புகாரில் சொன்ன மாதிரி ஒரே வாகனத்தில் இரண்டு வகையான வெடிபொருட்கள் கொண்டு செல்லப்படவில்லை என்றும் இரண்டு வாகனங்களில் தனித்தனியாக கொண்டு செல்லப்பட்டது என்றால் சரியல்ல. 2ம்

எதிரி முறையாக உரிமம் பெற்று வெடிமருந்து விற்பனை செய்து வருகிறார் என்றால் சோதனையின் போது உரிய ஆவணத்தை காட்டவில்லை. முறையாக உரிமம் பெற்ற வாகனத்தின் மூலம் முறையாக சட்டவிதிகளுக்கு உட்பட்டு எடுத்து செல்லப்பட்டது என்றாலும் சரியல்ல. எனக்கு பெயர், புகழ் கிடைக்கும் என்பதற்காக போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவர்கள் எழுதிக்கொடுத்த புகாரில் கையொப்பம் போட்டு கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் புகாரில் குறிப்பிட்டுள்ளது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரம், தேதியில் நான் நிலையம் ஆஜராகி புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. இரண்டு வாகனங்களிலும் வெடிபொருட்களை கையாளும் நபர்கள் இருந்தார்கள் என்றும் முறையான சட்டவிதிகளுக்கு உட்பட்டு உரிமம் பெற்றே வாகனங்களில் கொண்டு செல்லப்பட்டது என்றாலும் சரியல்ல.